சுருக்கம்

சென்னை மாநகராட்சி – சென்னை மாநகர வடக்கு, மத்திய, கிழக்கு மற்றும் தெற்கு நீர்த்தேக்கப் பகுதிகளில் – புதிய மழைநீர் வடிகால்வாய் கட்டுதல், மற்றும் மழைநீர் வடிகால்வாய் மேம்பாட்டுப் பணி – சென்னை மாநகராட்சி ரூ.778.29 கோடி ஒதுக்கீடு – நிர்வாக ஒப்புதல் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை

அரசாணை (நிலை) எண்.116

நாள்: 06.07.2009

ஆனி – 22,
திருவள்ளுவர் ஆண்டு – 2040,

OFFICE OF THE COMMISSIONER
- 6 JUL 2009

படிக்கவும்:

சென்னை மாநகராட்சி ஆணையர் கடித ம.நீ.வ.து.ந.க.எண்.
பி5/2134/2008, நாள்.24.02.2009 மற்றும் 28.05.2009

* * * * *

ஆணை:–

மேலே படிக்கப்பட்ட சென்னை மாநகராட்சி ஆணையரின் கடிதங்களில் சென்னை மாநகர வடக்கு, மத்திய, கிழக்கு மற்றும் தெற்கு நீர்த்தேக்கப் பகுதிகளில் புதிய மழைநீர் வடிகால்வாய் கட்டுதல், மற்றும் மழைநீர் வடிகால்வாய் மேம்பாட்டுப் பணிகளுக்கான இத்திட்டம் மாநில குழுமத்தால் 4.12.2008 ல் அனுமதி அளிக்கப்பட்டு மத்திய அரசின் நகர்ப்புற வளர்ச்சித் துறைக்கு அனுப்பப்பட்டு, இந்திய அரசால் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் (JNNURM) கீழ் பின்வருமாறு அனுமதி அளிக்கப்பட்டது.

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | நீர்த்தேக்கப் பகுதி | திட்ட தொகை | சென்னை மாநகராட்சி தொகை | பொதுப்பணித் துறை தொகை | அனுமதி அளிக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|---|
| 1. | வடக்கு நீர்த்தேக்கப்பகுதி | 359.86 | 277.17 | 82.69 | 19.12.2008 |
| 2. | மத்திய நீர்த்தேக்கப் பகுதி | 345.00 | 261.11 | 83.89 | 29.12.2008 |
| 3. | கிழக்கு நீர்த் தேக்கப் பகுதி | 444.07 | 140.40 | 303.67 | 14.01.2009 |
| 4. | தெற்கு நீர்த்தேக்கப் பகுதி | 298.98 | 136.20 | 162.78 | 22.01.2009 |
| | மொத்தம் | 1447.91 | 814.88 | 633.63 | |

2. சென்னை மாநகராட்சி ஆணையர் இதில் சென்னை மாநகராட்சியின் ஒதுக்கீடு ரூ.814.88 கோடி, இதில் மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு 35 சதவீதம் ரூ. 285.25 கோடி, மாநில அரசின் நிதி ஒதுக்கீடு 15 சதவீதம் ரூ. 122.25 கோடி மற்றும் நகர்ப்புற உள்ளாட்சித்துறையின் நிதி ஒதுக்கீடு 50 சதவீதம் ரூ. 407.50 கோடி ஆகும் எனத் தெரிவித்துள்ளார்.

3. இந்தத் திட்டத்தில் ரூ. 159.56 கோடியில் 28.64 கி.மீ. நீளத்திற்கு 16 கால்வாய்களில் மேம்பாட்டுப் பணிகள் ரூ. 343.26 கோடியில் 288.50கி.மீ நீளத்திற்கு புதிய மழைநீர் வடிகால்வாய்கள் பணிகள், ரூ. 276.87 கோடியில் 183.08 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால்வாய்கள் மாற்றி மீண்டும் கட்டும் பணி கால்வாய் மேம்பாட்டுப் பணிகள் மற்றும் மழைநீர் வடிகால்வாய்கள் பணிகளும்

படிப்படியாக மூன்று நிதியாண்டுகளில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

4. சென்னை மாநகராட்சி ஆணையர் இத்திட்டத்திற்கான விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அவற்றை 4 நீர்த்தேக்கப் பகுதிகளாக வகைப்படுத்தி, மேலும் அவற்றை 12 நீர்ப்பிடிப்புப் பகுதிகளாக பிரிக்கப்பட்டு இதற்கான தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். அவற்றின் விவரம் பின்வருமாறு.

| நீர்த்தேக்கப் பகுதியின் பெயர் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை ரூ. கோடியில் |
|---|---|---|
| <u>வடக்கு நீர்த்தேக்கப்பகுதி</u> | | |
| தொகுப்பு – 1 கொளத்தூர் நீர் பிடிப்புப் பகுதி | 44 | 25.53 |
| தொகுப்பு –2 கேப்டன் காட்டன் கால்வாய் நீர் பிடிப்புப் பகுதி | 110 | 108.18 |
| தொகுப்பு–3 ஓட்டேரி நல்லா நீர்ப்பிடிப்புப் பகுதி | 187 | 106.64 |
| **மொத்தம்** | **341** | **240.35** |
| <u>மத்திய நீர்த்தேக்கப்பகுதி</u> | | |
| தொகுப்பு–4 மாம்பலம், நந்தனம் நீர்ப்பிடிப்புப் பகுதி | 112 | 121.53 |
| தொகுப்பு–5 கூவம் ஆறு நீர்ப்பிடிப்புப் பகுதி | 131 | 87.57 |
| தொகுப்பு –6 விருகம்பாக்கம், அரும்பாக்கம் நீர்ப்பிடிப்புப் பகுதி | 104 | 60.32 |
| **மொத்தம்** | **347** | **269.42** |
| <u>கிழக்கு நீர்த்தேக்கப்பகுதி</u> | | |
| தொகுப்பு –7 ராயபுரம் நீர்ப்பிடிப்புப் பகுதி | 55 | 30.00 |
| தொகுப்பு – 8 வடக்கு பக்கிங்காம்கால்வாய் நீர்ப்பிடிப்புப் பகுதி | 31 | 20.50 |
| தொகுப்பு – 9 மத்திய பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்புப் பகுதி | 70 | 47.17 |
| தொகுப்பு – 10 தெற்கு பக்கிங்காம்கால்வாய் நீர்ப்பிடிப்புப் பகுதி | 72 | 39.96 |
| மொத்தம் | 228 | 137.63 |
| <u>தெற்கு நீர்த்தேக்கப்பகுதி</u> | | |
| தொகுப்பு– 11 அடையாறு நீர்ப்பிடிப்புப் பகுதி | 97 | 83.37 |
| தொகுப்பு – 12 வேளச்சேரி நீர்ப்பிடிப்புப் பகுதி | 57 | 47.52 |
| **மொத்தம்** | **154** | **130.89** |
| மொத்தம் | 1070 | 778.29 |

5. சென்னை மாநகராட்சி ஆணையர் இந்த 1070 பணிகளுக்கான விரிவான மதிப்பீடுகள் கள ஆய்வின்படி தயாரிக்கையில் சிறு மாற்றங்கள் ஏற்பட்டன என்றும், திருத்திய நீர்த்தேக்க தொகுப்புகளின் மதிப்பீட்டுத் தொகை கீழே பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

<u>ரூ. கோடியில்</u>

| வ.எண் | நீர்த்தேக்கப் பகுதியின் பெயர் | JNNURM ஒப்பளித்த தொகை | விபர மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | வடக்கு நீர்த்தேக்கப் பகுதி | 277.17 | 240.35 |
| 2 | மத்திய நீர்த்தேக்கப் பகுதி | 261.11 | 269.42 |
| 3 | கிழக்கு நீர்த்தேக்கப் பகுதி | 140.40 | 137.63 |
| 4 | தெற்கு நீர்த்தேக்கப் பகுதி | 136.20 | 130.89 |
| | **மொத்தம்** | **814.88** | **778.29** |

6. சென்னை மாநகராட்சி ஆணையர் இத்திட்டத்தில் ஒவ்வொரு நீர்ப்பிடிப்பு பகுதிகள் உள்ள பிரதான கால்வாய் மற்றும் இணைப்பு கால்வாய் பணிகளையும் தனித்தனியாக மேற்கொள்ளலாம் ஒரு நீர்ப்பிடிப்பு பகுதியில் பணிகள் நிறைவுபெறும்போது மற்ற நீர்ப்பிடிப்பு பகுதிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தாலோ அல்லது தொடங்கப்படாமல் இருந்தாலோ பணி முடிந்து நீர்ப்பிடிப்பு பகுதிகள் செயல்படுமாறு இருக்க வேண்டும் என்றும், ஒவ்வொரு நீர்ப்பிடிப்பு தொகுப்பிலும் சேகரிப்பு கால்வாய்கள், பிரதான கால்வாய்கள், நீர்வழிக்கால்வாய்கள் பணிகளை ஒரே ஒப்பந்தக்காரர் மேற்கொள்ளும்போது அளவுகளில் எவ் வித பாதிப்பும் இல்லாமல் தொடர்ச்சியாக இருக்கும். ஒரே நீர்ப்பிடிப்பு பகுதியில் பல ஒப்பந்தங்கள் கோரப்பட்டால் ஒப்பங்கள் சரியாக ஒப்புதல் பெறமுடியாத தருணத்திலும், மட்ட அளவுகள் ஒன்றுடன் ஒன்று பொருந்துமாறு ஒருங்கிணைப்பு சிரமமாக இருக்கும் என்றும், மேலும் ஒரு தொகுப்பில் மட்டும் பணிகள் முடிவடைந்து மற்ற தொகுப்பில் உள்ள கால்வாய்கள் இணைப்பில் விடுபட்டுப் போக வாய்ப்புள்ளது என்றும், எனவே மேற்கூறிய காரணங்களால் நீர்ப்பிடிப்பு பகுதியின் அடிப்படையில் ஒப்பந்தங்கள் கோர தொழில்நுட்ப குழுமம் (சென்னை மாநகராட்சி) ஒப்புக்கொண்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

7. இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு மத்திய அரசு நகர அபிவிருத்தி துறை குழுமத்தின் மூலம் சென்னை மாநகராட்சி மற்றும் பொதுப்பணித்துறைக்கும் சேர்த்து மொத்த தொகையாக ரூ.1447.48 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் சென்னை மாநகராட்சிக்கான தொகை ரூ. 814.88 கோடி ஆகும். இதில்,

மத்திய அரசின் பங்கு 35% (285.25 கோடி)

மாநில அரசின் பங்கு 15% (122.25 கோடி)

உள்ளாட்சியின் பங்கு 50% (407.50 கோடி)

8. சென்னை மாநகராட்சி மேற்படி திட்டத்திற்கு TUFIDCO, TNUIFSL மற்றும் நகர அபிவிருத்தி உள்கட்டமைப்பு நிதியின் மூலம் வீட்டு வசதி துறையின் அரசாணை எண்.30, தேதி 7.2.2008ன் படி நிதி கோரப்பட்டுள்ளதாக சென்னை மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

9. மேலும், செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களால் நடத்தப்பட்ட ஆரம்பக்கட்ட கூட்டத்ததில் நிர்வாக இயக்குனர் TNUIFSL, பொது மேலாளர் TUFIDCO மற்றும் சென்னை மாநகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்டனர் என்றும், சென்னை மாநகராட்சி இத்திட்டத்திற்கான பங்கு ரூ.410 கோடி, பொது மேலாளர் TUFIDCO முதல் நிதியாக MIDF நிதியின்கீழ் ரூ.100 கோடியை 4 % வட்டி விகிதத்தில் கொடுக்க ஒப்புக்கொண்டுள்ளது என்றும், TNUIFSL நிர்வாகி அவர்கள் முதல் நிதியாக ரூ.150 கோடி 9.5% வட்டி விகிதத்தில் கொடுக்க ஒப்புக்கொண்டுள்ளதாகவும், மீதமுள்ள ரூ.160 கோடி தொகையை நகர அபிவிருத்தி உள்கட்டமைப்பு நிதியில் வீட்டு வசதி துறை அரசாணை எண்.30, நாள்.7.2.2008ன் மூலம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

10. மேற்படி இத்திட்டம் நிலமட்டத்திற்கு ஏற்ப விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் படி சேமிப்பாக உள்ள தொகையை சென்னை மாநகராட்சியும், பொதுப்பணித்துறையும் சேர்ந்து மேற்படி திட்ட பணிகளை மேற்கொள்ளும்போது திட்ட மதிப்பீட்டில் இல்லாத சில இணைப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கும் என்றும், அதற்கான பணி மேற்கொள்ளும்போது தேவைக்கு ஏற்ப மதிப்பீடு தயாரித்து சேமிப்பு தொகையில் உபயோகப்படுத்தப்படும் என்றும் சென்னை மாநகராட்சி ஆணையர் கூறியுள்ளார்.

11. மேற்கண்டவாறு, சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்படவுள்ள மழைநீர் வடிகால்வாய் திட்ட பணிகளுக்கு மாநகராட்சி கீழ்க்கண்ட பங்கு தொகைக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்குமாறு அரசை சென்னை மாநகராட்சி ஆணையர் கோரியுள்ளார்.

ரூ. கோடியில்

| வ. எண் | நீர்த்தேக்கப் பகுதி | ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தில் சென்னை மாநகராட்சி பங்கு தொகை |
|---|---|---|
| 1. | வடக்கு நீர்த்தேக்கப்பகுதி | 277.17 |
| 2. | மத்திய நீர்த்தேக்கப் பகுதி | 261.11 |
| 3. | கிழக்கு நீர்த் தேக்கப்பகுதி | 140.40 |
| 4. | தெற்கு நீர்த்தேக்கப்பகுதி | 136.20 |
| | மொத்தம் | 814.88 |

12. சென்னை மாநகராட்சி ஆணையரின் கருத்துருவை நன்கு பரிசீலித்த அரசு இத்திட்டத்திற்கான JNNURM கீழ் சென்னை மாநகராட்சிக்கு ஒப்பளித்த பங்குத் தொகை ரூ.814.88 கோடி என்று உள்ள நிலையில், திருத்திய நீர்த் தேக்க தொகுப்புகளின் மதிப்பீட்டுத் தொகையான ரூ.778.29 கோடிக்கு இருப்பதால் ரூ.778.29 கோடிக்கு (ரூபாய் ஏழுநூற்று எழுபத்து எட்டு கோடியே இருபத்தொன்பது மட்டும்) அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணையிடுகிறது. மேலும் மீதமுள்ள ரூ.36.59 கோடிக்கு திருத்திய செயற்குறிப்பினை அரசின் நிர்வாக ஒப்புதல் வேண்டி அரசுக்கு அனுப்பி வைக்குமாறு சென்னை மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

13. இவ்வாணை 22.06.2009 நாளிட்ட நிதித்துறை அ.சா.எண்.1626/FS/P/2009 ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி,
அரசு செயலாளர்.

பெறுநர்:
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 3.
மாநில கணக்காயர், சென்னை – 18/35
இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை – 108.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9
நிதி அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9
தலைமைச் செயலரின் தனி செயலர், சென்னை – 9
நிதித்துறை, சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு செயலாளரின் தனி செயலர், சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2)துறை, சென்னை – 9
இருப்பு கோப்பு / உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

06/07/09

பிரிவு அலுவலர்